1979 ஏப்ரல் 25]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அரசு ஆணை எண் 695, சமூக நலத் துறை, 7—6—1971-ல் 1971-72 கல்வியாண்டு முதற் கொண்டு அனைத்துக் கல்வி நிலையங்களிலும் தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 18 விழுக்காடு இடங்களும் பின் தங்கிய மாண வர்களுக்கு 31 விழுக்காடு இடங்களும் ஒதுக்கப்படுதல் வேண்டு மென்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இவ்வாணையைத் தொடர்ந்து பின்தங்கிய மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்களுக்கு இடம் ஒதுக்கீடு செய்தல் பின்பற்றப்படுவது கல்வி நிலையங்களுக்கு மாநில அரசு நிதியிலிருந்து அளிக்கப்படும் மானியங்களுக்கு ஒரு நிபந்தனையாக அமையும் என்று ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. கே. சௌந்திரராசன்: அமைச்சர் அவர்கள் 18 சத விகிதம் விழுக்காடு தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு சென்னைப் பல்கலைக் கழகத்தில் இடம் ஒதுக்கப்படுகிறது என்று அறிவித் தார்கள். மற்ற பல்கலைக் கழகங்களில் அந்த உத்தரவு கடைபிடிக்கப்படுகிறதா? அதை மீறிய பல்கலைக்கழகம் ஏதேனும் உண்டா?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: அது பற்றிய விவரம் இல்லையென்றாலும் மற்ற பல்கலைக் கழகங்களும் இதைப் பின்தொடர வேண்டுமென்பதுதான் இந்த அரசின் கருத்து. அப்படிப் பின்பற்றாத பல்கலைக் கழகங்கள் மீது மானியங்களைத் தரும்போது அதன் அடிப்படையில் அதைப் பயன்படுத்தி தேவையான நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

நெல்லை மாவட்டத்தில் விளையாட்டு அரங்கம்.

வினா எண் 810 : திரு யா. சை. மு. யூசப்: மாண்புமிகு கல்வித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லை மாவட்டத்தில் ஒரு விளையாட்டு அரங்கம் அமைக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உண்டா?

(ஆ) ஆம் எனில், அப் பணி எப்போது மேற்கொள்ளப்படும்?

(இ) விளையாட்டுப் பயிற்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் ஒரு பகுதியை இத் திட்டத்திற்குச் செலவிட அரசு முன் வந்துள்ளதா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

[1979 ஏப்ரல் 25

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: (அ) & (ஆ) இல்லை. ஒவ்வொரு மாவட்டத்திலும் தமிழ்நாடு மாநில விளையாட்டு மன்றத்தினைக் கலந்து மாவட்ட விளையாட்டு மன்றம் மூலம் அரசின் முழு நிதி உதவியுடன் ஒரு விளையாட்டு அரங்கம் கட்டப்பட வேண்டும் எனும் கொள்கைக் கேற்ப பாளையங்கோட்டையில் 11—2—1978-ல் திறக்கப்பட்ட அண்ணா விளையாட்டு அரங்கத்தைத் தவிர வேறு விளையாட்டு அரங்கம் அமைக்க அரசிடம் திட்டமேதுமில்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. யா.சை.மு. யூசப்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட அண்ணா விளையாட்டரங்கத்தில் ஒரு பக்கத்தில் மட்டுந்தான் பார்வையாளர் அமர்ந்து பார்க்கும் வகையில் மாடம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த இடமும் ஒதுக்குப் புறமாக இருக்கும் காரணத்தால் நெல்லை நகரில் வயல் வெளியை அரசு கையகப்படுத்தியாவது நல்ல முறையில், நவீன முறையில் அந்த மாவட்ட மக்கள் நலனைக் கருதி விளையாட்டரங்கம் ஏற்படுத்தித் தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம்: அண்ணா விளையாட்டரங்கைச் சுற்றிலும் பாதுகாப்புச் சுவர் கட்டப்பட்டு அரங்கத்தைச் சிறப்பாகச் செய்வதற்காக நிதி கோரி நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு விண்ணப்பித்துக் கொண்டிருக்கிறார். அன்னாரின் விண்ணப்பம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களைப் பிரித்தமைத்தல்.

* வினா எண் 811; திரு. கோ. ரகோத்தமன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தென் ஆற்காடு மாவட்டம் முகையூர் ஊராட்சி ஒன்றியத்தை பிரிக்கும் உத்தேசம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: (அ) தற்போது இல்லை.

(ஆ) இவ் வினா எழவில்லை.

திரு. கோ. ரகோத்தமன்: தென்னாற்காடு மாவட்டம், முகையூர் பஞ்சாயத்து யூனியன் 65 பஞ்சாயத்துக்களையுடையது. அதிகமான மக்கள் தொகையுடையது, நிலப் பரப்பு அதிகமாக உள்ளது. ஆகவே, உடனடியாக அதைப் பிரிக்க மாநில அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?